Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Impact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p517 TIRJTS-2026-0046
DOI: 10.63300/tamilmanamintresjtamilstud.v12i06.28

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

குருசிலாப்பட்டுக் கூத்தாண்டவர் கோவில் அரவான் வழிபாட்டு முறைகள்

Aravan Worship Practices at the Kurusilapattu Koothandavar Temple

ப.காவியா[1,*], முனைவர் ம.சரளாதேவி[2]

[1] முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்.

[2] ஆய்வு நெறியாளர், இணைப் பேராசிரியர் (சுழற்சி-2), தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) திருப்பத்தூர். (திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

***Corresponding author:** ப.காவியா, kaviyasparrow@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 5 November 2026
Accepted: 8 November 2026

Article ID
TIRJTS-2026-0046

Peer review
Double-blind peer review

Keywords
Kurusilapattu
Koothandavar Temple
Aravan worship
transgender culture
rituals
Sangam period
gender identity
Tamil Nadu folk traditions

ABSTRACT

Human society is shaped by communities with diverse identities and ways of life, with gender distinctions between men and women emerging alongside human origins. Within this spectrum, transgender individuals have held a presence in society since the Sangam period, even as their lived experiences have been shaped by social, economic, and cultural challenges. While various communities observe major religious festivals such as Pongal, Deepavali, and Chithirai Puthandu among Hindus, Ramzan and Muharram among Muslims, and Christmas and Good Friday among Christians, Koothandavar worship holds central significance for transgender devotees. Alongside distinct rituals, festivals, kinship ties, customs, and cultural practices, this study examines the modes of worship practiced at the Kurusilapattu Koothandavar Temple.

How to cite this article: ப.காவியா, & முனைவர் ம.சரளாதேவி (2026). குருசிலாப்பட்டுக் கூத்தாண்டவர் கோவில் அரவான் வழிபாட்டு முறைகள். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 517. https://doi.org/10.63300/tamilmanamintresjtamilstud.v12i06.28
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முன்னுரை

மனித சமூகம் பல்வேறு அடையாளங்களையும் வாழ்வியல் முறைகளையும் கொண்ட மக்களால் உருவாக்கப்பட்டுள்ளது. மனித இனம் தோன்றிய போது ஆண், பெண் என்ற பாலினப் பாகுபாடு தோன்றுவிட்டது. அதிலிருந்து பால் திரிபு கொண்டவர்கள் தான்

திருநங்கைகள். சங்க காலம் முதல் திருநங்கைகள் சமூகத்தில் இடம் பெற்றிருந்தாலும், அவர்களின் வாழ்வியல் பல்வேறு சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டுச் சவால்களால் பாதிக்கப்பட்டுள்ளது. உலகில் உள்ள மக்கள் பல்வேறு விதமான திருவிழாக்களைக் கொண்டாடியும் அதனைப் பின்பற்றியும் வருகின்றனர். இந்து மக்களுக்குப் பொங்கல் விழா, தீபாவளி, சித்திரை வருடப்பிறப்பு போன்ற விழாக்களும், முஸ்லிம் மக்கள் ரம்ஜான், மொகரம் போன்ற விழாக்களையும், கிறிஸ்துவ மக்கள் கிறிஸ்துமஸ், புனித வெள்ளி போன்ற விழாக்களையும் கொண்டாடி வருகின்றனர். ஆனால் திருநங்கைகளுக்கு முக்கியமாக இருப்பவை கூத்தாண்டவர் வழிப்பாடு ஆகும். மேலும் திருநங்கைகளுக்கெனச் சடங்கு முறைகள், விழாக்கள், உறவுமுறைகள், பழக்க வழக்கங்கள், பண்பாடு போன்ற வாழ்வியல் கூறுகள் அனைத்தும் உள்ளன. இதிலிருந்து குருசிலாப்பட்டு கூத்தாண்டவர் கோவிலில் நடைபெறும் வழிபாட்டு முறைகளை வகையில் இக்கட்டுரை அமைகிறது.

முதன்மைச் சொற்கள்

- முன்னுரை
- குருசிலாப்பட்டுக் கோவில் வரலாறு
- குருசிலாப்பட்டுக் கூத்தாண்டவர் வரலாறு
- கூத்தாண்டவர் நம்பிக்கை
- அரவான் வரலாறு
- இரண்டு கூத்தாண்டவர்களுக்கும் உள்ள வேறுபாடு
- முடிவுரை
- துணைநூற் பட்டியல்

குருசிலாப்பட்டுக் கூத்தாண்டவர் வரலாறு

குருசிலாப்பட்டுக் கிராமத்தில் கீழ்நிலை மக்களில் ஒருவரான பெரியசாமி என்பவருக்குக் கனவு வந்து அதில், நான் கூத்தாண்டவர் வந்துள்ளேன், என் உடலானது மலை உச்சியில் உள்ளது. தலை மட்டும்தான் கீழே இருக்கிறது. எனக்குக் கோவில் இல்லாமல் ஊர் ஊராகச் சுற்றித் திரிகிறேன். நான் ஒரே இடத்தில் இருப்பதற்கு ஒரு கோவிலைக் கட்ட வேண்டும் என்று கூறியதாம். பிறகு கனவில் வந்ததை அவர் வீட்டில் உள்ளவர்களுக்கும் ஊரில் இருப்பவர்களுக்கும் சொல்லி இருக்கிறார். ஆனால் யாரும் நம்பவில்லை. இவரும் அந்தக் கனவை பெரிதாகப் பொருட்படுத்தாமல் இருந்துள்ளார். மீண்டும் அடுத்த நாள் கனவில் அதே மாதிரி சொல்லியதும் அவர் நம்பி, வீட்டில் யாருக்கும் சொல்லாமல் அடுத்தநாள் இரண்டு நண்பர்களுடன் விறகு வெட்டச் சென்றுள்ளனர். சிலை செய்ய நல்ல தரமான விறகு வெட்டியதும், அவற்றைத் தூக்க முடியவில்லை. விறகு மிகவும் கனமாக இருந்துள்ளது.

பாதி தூரம் மட்டும் விறகை தூக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு மேல் அவர்களால் தூக்க முடியாமல் அங்கேயே துணியைப் போட்டு மூடி மறைத்து அடுத்த நாள் சென்று எடுத்துக் கொள்ளலாம் என்று வீட்டிற்கு வந்து விட்டனர். மறுநாள் அவர்கள் முதல் வேலையாக அனைவரும் விறகை எடுக்கச் சென்றனர் மலை அடிவாரத்திலேயே செல்லும்போது பார்த்தால் அந்த விறகு கட்டையானது அங்கே இருந்துள்ளது. அவர்களால் அதனை நம்பவே முடியவில்லை. அனைவரும் பயத்துடன் விறகுக் கட்டையை தூக்கிக் கொண்டு வந்துவிட்டனர். அன்று பூசாரியிடம் சென்று குறி கேட்டார்கள். அதில் உங்களால் தான் என்னை தூக்க முடியவில்லை. அதனால் தான் நானே கீழே வந்து விட்டேன் என்று கூறியதாம். ஊரில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்றாகப் பூஜை செய்து கூத்தாண்டவர் சிலையை செய்ய விறகுக் கட்டையை வழிப்பட்டு அனுப்பினார்கள்.

திருப்பத்தூர் பழைய பேருந்து நிலையம் பின்னாடி கடவுள் சிலையைச் செய்யும் நபர்கள் இருக்கின்றனர். அங்குச் சென்று கூத்தாண்டவர் தலையை செய்து தருமாறு கொடுத்துவிட்டு ஊரில் உள்ள பெரியோர்கள் வந்துள்ளனர். ஒரு ஆண்டிற்குப் பிறகு கூத்தாண்டவர் தலையானது கட்டையைக் கொண்டு செய்யப்பட்டது. கிராமத்திற்குப் பொது இடத்தில் சுற்றிலும் சுவர் எழுப்பி மேற்கூரையை ஓலையைக் கொண்டு கூத்தாண்டவர்க்கு கோவில் கட்டப்பட்டது. கோவிலின் அமைப்பு சிறியதாக இருந்தது. ஊரில் உள்ள பெரியோர்கள் எல்லாம் சென்று கூத்தாண்டவர் சிலையை அங்கேயே வழிபட்டு கண்களை மட்டும் கட்டி எடுத்து வந்தனர். வரும் வழியில் அவ்வப்போது சேவல் கூவுவது போல கூத்தாண்டவர் சிலை சத்தம் எழுப்பியதாம். அனைவரும் பயத்துடன் வந்திருக்கிறார்கள். குருசிலாப்பட்டு எல்லைக்குள் வண்டி வரும்போது கூத்தாண்டவருக்கு கட்டப்பட்ட துணி சற்று விலகி இருக்கிறது. வலது புறமாக முகம் இருந்துள்ளது.

ஊரின் எல்லையில் துணிகளை வெளுக்கும் வேலைகளைச் செய்யும் சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். கூத்தாண்டவர் கண்களில் துணி விலகிய அடுத்த நொடியிலேயே அந்தக் கிராமம் எரிந்ததாம். கிட்டத்தட்ட அடுத்தடுத்து ஒரு கிலோ மீட்டர் மேலாக கிராமம் எரிந்து உள்ளது. வண்டியில் இருப்பவர்களுக்கு ஒன்றுமே புரியாமல் பயத்துடன் வண்டியை விட்டு கீழே இறங்கி கூத்தாண்டவர் கண்களை இறுக்கமாகக் கட்டி அங்கேயே ஒரு கோழி அறுத்து பூஜை செய்து வந்துள்ளார்கள். இதுவே இன்று குருசிலாப்பட்டில் அமைந்துள்ள கூத்தாண்டவர் ஆகும்.


குருசிலாப்பட்டு கோவிலின் அமைப்பு

கோவிலின் கருவறையானது கிழக்கு திசை நோக்கிக் காணப்படும். கருவறைக்குள் இரண்டு சிலைகள் இருக்கும் ஒன்று முதலில் வைத்த பழைய சிலையாகும். மற்றொன்று காவல்துறை அதிகாரி ஒருவர் பதவி உயர்வு வேண்டுமென்று

கூத்தாண்டவரை வணங்கி சென்றுள்ளார். அந்த வேண்டுதல் நடந்ததும் இரண்டாவதாக ஒரு சிலையை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார். கோவிலின் கருவறைக்குள் எல்லா மக்களும் சென்று வழிபடுகின்றனர். திருவிழாவின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கோவிலுக்கு வருகிறார்கள். மற்ற நாட்களிலும் மக்கள் வருகையானது தொடர்ந்து இருக்கிறது. எந்த ஒரு நல்ல விஷயங்களுக்குச் சென்றாலும் கூத்தாண்டவரை வணங்கிவிட்டு தான் அந்த ஊரில் உள்ள மக்கள் செல்கின்றனர்.

கோவிலுக்குப் பின்னாடி இடம் இருக்கிறது. திருவிழாவின் போது மக்கள் அங்கு தான் பொங்கல் வைக்கின்றனர். அந்த இடத்தை ஊரில் உள்ள ஒருவர் கோவிலுக்குத் தானமாகக் கொடுத்துள்ளார். 2013 ஆம் ஆண்டு தான் முதன் முதலில் இந்தக் கூத்தாண்டவர் கோவிலுக்குக் குடமுழுக்கு செய்யப்பட்டது. கருவறைக்கு வெளியே இருபுறமும் இரண்டு துவார பாலகர்கள் இருக்கின்றனர். கூத்தாண்டவர் சிலைகள் இரண்டும் தனித்தனியாக இருக்கும். அன்பளிப்பாக வந்த சிலையை எடுத்து முதல் சிலையின் மீது பொருத்தி விடுவர். திருவிழா முடிந்ததும் அதனைத் தனித்தனியாகப் பிரித்து வைத்து விடுவார்கள்.





(குருசிலாப்பட்டு கூத்தாண்டவர் கோவில் அமைப்பு) **(குருசிலாப்பட்டு கோவிலின் வலது புறக் காட்சி)**

கோவிலின் கருவறைக்கு எதிரே ஒரு லிங்கம் உள்ளது. கோவிலைச் சுற்றி உள்ள சுவர்களில் நன்கொடை அளித்தவர்கள் பெயர் காணப்படுகிறது. வேறு வேறு சமூகத்தினர் ஊரில் இருந்தாலும் கோவிலின் கருவறைக்குள் எல்லாருமே சென்று கூத்தாண்டவரைத் தொட்டு வழிபடுகின்றனர். உயர்சாதி பிரிவினைச் சேர்ந்த குடும்பத்தினர் ஒருவர் தான் கோவிலில் தற்போது பூசாரியாக இருந்து வருகிறார். அவர் ஊரில் இல்லை என்றால் அவருடைய மனைவி கோவில் பூஜைகளைச் செய்கின்றார். அதிகப்படியான பூஜைகளை அந்தப் பெண்மணி தான் செய்கிறார்.

குருசிலாப்பட்டு கோவில் திருவிழா

குருசிலாப்பட்டு கோவிலானது 200 வருடத்திற்கு மேலாக உள்ளது. தை மாதம் முதல் வெள்ளிக்கிழமை திருவிழா கொண்டாடப்படுகிறது. திருவிழா அதிகாலை 3 மணிக்குத் தொடங்கி விடும். அந்த ஊரில் உள்ள ஏழு கிராம மக்கள் ஒன்றாகத் திருவிழாவைக் கொண்டாடி வருகின்றனர். முதலில் கீழ்நிலை மக்கள் தான் கூத்தாண்டவர்க்கு முதல் பூஜை செய்து வழிபடுகின்றனர். அந்த மக்கள் தங்களுடைய பங்காளிகள் மற்றும் சொந்தங்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கோவிலைச் சுத்தம் செய்து கூத்தாண்டவர்க்கு அலங்காரம் செய்வார்கள். பூஜை செய்வதற்காக மாவிளக்கு, அரிசி, ஆடு, பூமாலை மற்றும் பூஜை பொருட்கள் போன்ற அனைத்தையும் எடுத்துச் செல்வர். இவர்களின் சமூகம் மட்டுமே கிட்டத்தட்ட 200க்கும் மேற்பட்ட ஆடுகளை வெட்டுகின்றனர். கூத்தாண்டவருக்கு பூமாலையை அவரவர்களின் வசதிக்கேற்ப கொண்டு செல்கின்றனர். ஐந்தாயிரம், பத்தாயிரம் மதிப்புள்ள மாலைகளை பல்வேறு அலங்கார வகைகளில் இவர்கள் கூத்தாண்டவர்க்குச் செலுத்துகின்றனர்.

கோவிலைச் சுத்தம் செய்த பிறகு பூசாரியிடம் பூஜைப் பொருட்களைக் கொடுப்பர். கொண்டு வந்த அரிசியினை பாத்திரத்தில் கொட்டுவார்கள். அனைவரும் ஒன்றாகக் கோவிலின் எதிரில் பொங்கல் வைத்து ஆடுகளை வெட்டி, பூஜை செய்து வழிபட்டு செல்வர். இவர்களே கூத்தாண்டவர்க்குத் தாய்வீடு ஆகும். இவர்களின் சமூகம் முதலில் பூஜை செய்தால்தான் கூத்தாண்டவர் ஏற்றுக் கொள்கிறாராம். வேறு சமூகத்தினர் வந்து பூஜை செய்தால் ஏதாவது ஒரு பிரச்சனை உண்டாகிறதாம். அதனால் எல்லா வருடமும் முதல் பூஜை இவர்களே தருகின்றனர். இவர்களுக்குப் பிறகுதான் மற்ற சமூகத்தினர் கோவிலுக்கு வந்து பொங்கல் வைத்து ஆடுகளை வெட்டி, பூஜை செய்து செல்கிறார்கள்.




GPS Map Camera
Kurisilapattu, Tamil Nadu, India
Gm63+383, Kurisilapattu, Tamil Nadu 635702, India
Lat 12.510114° Long 78.653303°
Wednesday, 22/07/2026 11:28 AM GMT +05:30
Google

(திருவிழா அன்று கூத்தாண்டவர்) (கருவறையில் இருக்கும் இரண்டு சிலைகள்)

முதல் நாள் திருவிழா அன்று கிட்டத்தட்ட 600க்கும் மேற்பட்ட ஆடுகள் வெட்டப்படுகிறது. அந்த ஆட்டின் ரத்தம் மட்டுமே ஆறாக ஓடும். மேலும் மக்களின் வருகையானது அதிகமாகக் காணப்படுகிறது. எல்லா ஊர்களில் இருந்தும் மக்கள் வந்து கூத்தாண்டவரை வழிபட்டுச் செல்கின்றனர். ஆரம்ப காலத்தில் திருவிழா ஒரு நாள் மட்டுமே நடைபெற்றது. 2022ம் ஆண்டிற்குப் பிறகு தான் திருவிழா இரண்டு நாட்களாகக் மாறி உள்ளது. இரண்டாம் நாளாக கலை நிகழ்ச்சிகள், தெருக்கூத்து போன்றவை நடைபெறும். அதிகமாக காணிக்கை வந்தால் கலை நிகழ்ச்சிகள் ஒரு நாளைக்குக் இரண்டு வைப்பார்கள். முதல் நாள் திருவிழா ஆடு வெட்டி, பொங்கல் வைத்து உறவினர்கள் வருவது இதுபோன்ற நிகழ்வு நடைபெறும். அதுமட்டுமில்லாமல் வழியில் செல்பவர்களுக்கும் கறியை பகிர்ந்து கொடுப்பார்கள். வீட்டிற்கு யார் சென்றாலும் உணவு தருவார்கள்.

குருசிலாப்பட்டு கூத்தாண்டவர் நம்பிக்கை

கூத்தாண்டவர் கோவிலின் அமைப்பு முதலில் சிறியதாக இருந்தது. கருவறைக்குள் குனிந்து தான் செல்வார்கள். சிலையை வைத்து சில நாட்களுக்குப் பிறகு பல பிரச்சினைகள் அந்த ஊரில் நடந்தது. கோவிலில் உள்ள பணத்தை அந்த ஊரில் உள்ளவர்கள் யாரோ திருடி இருக்கின்றனர். ஒரே வாரத்தில் அவர்களின் உயிர் போனதாம். மேலும், ஆங்காங்கே பல ஊர்கள் தீப்பிடித்து எரிந்துள்ளது. அடுத்தடுத்து பல சம்பவங்களும் நிகழ்ந்ததாம். இதனைக் கண்ட மக்கள் கூத்தாண்டவர் கோபக்கார கடவுளாக இருக்கிறார் என்று கருதினர். தவறு என்றால் கூத்தாண்டவருக்குப் பிடிக்காது. மக்கள் அனைவரும் கோவிலின் அருகே ஒன்றாகக் கூடி கலந்து பேசி ஒரு முடிவை எடுத்தார்கள். கூத்தாண்டவர் கண்களுக்கு ஆணி அடித்து விட்டனர். அதன் பிறகு எந்த பிரச்சனையும் அந்த ஊரில் நிகழ்வதில்லை. அந்த ஆணியை இன்றளவும் யாரும் எடுப்பதும் இல்லை. ஊரில் உள்ள எந்த ஒரு தவறான பிரச்சனைகளைச் செய்வதற்குப் பயந்தனர். கூத்தாண்டவர் கோபத்தைப் பற்றி அனைத்து மக்களும் நன்றாக அறிந்து இருக்கிறார்கள். என்னதான் கூத்தாண்டவர் கோபமானவராக இருந்தாலும் இன்றைய காலம் வரையிலும் மக்களுக்கு நன்மை செய்து அருள் புரிந்து வருகிறார். மக்கள் வேண்டுகின்ற அனைத்து வேண்டுதல்களையும் நிறைவேற்றுகிறார் என்ற நம்பிக்கை இன்று வரையிலும் மக்களிடையே உள்ளது.

- குழந்தைக்காக வேண்டுதல்
- உடலில் நோய் நீங்குதல்
- திருமணம் நடத்தல்

இவைபோன்ற எல்லா வேண்டுதல்களையும் மக்கள் கூத்தாண்டவரிடம் வேண்டுகின்றனர். எல்லா வேண்டுதல்களையும் கூத்தாண்டவர் நிறைவேற்றுகிறார் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுகிறது.

கூத்தாண்டவர் கோவில் அரவான் வழிபாடு

எத்திசையில் இருந்தும் திருநங்கைகள் வந்து கூடிக் கொண்டாடும் விழா கூத்தண்டவர் விழா ஆகும். விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்ப்பேட்டை வட்டம் கூவாகம் கிராமத்தில் இக்கோவில் இருக்கிறது. முதலில் கூரைக் கோவிலாக இருந்தது. பின்னர் தான் கட்டடக் கோவிலாக மாறியது. இந்தக் கோவில் உருவானதற்குப் பல கதைகள் உள்ளன. ஆனால் இன்று அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் இக்கோவில் திருவிழா சித்திரா பௌர்ணமி அன்று ஆரம்பமாகி மகாபாரதப் போர் நடைபெற்றதைக் குறிக்கும் வகையில் 18 நாட்கள் நடைபெறுகிறது.





(விழுப்புரம் கூத்தாண்டவர்) (விழுப்புரம் கூத்தாண்டவர் திருவிழா இரவு நேரக் காட்சி)

முதல் நாள் கொடியேற்றத்துடன் தொடங்கி தினந்தோறும் பாரதம் ஆரம்பம், பாஞ்சாலி பிறப்பு, தர்மர் பிறப்பு, பீமர் பிறப்பு, பகாசுரன் வதம், பாஞ்சாலி திருமணம், கூத்தாண்டவர் பிறப்பு, கிருஷ்ணர் தூது, தர்மர் பட்டாபிஷேகம் போன்ற தலைப்புகளில் பாரத சொற்பொழிவு ஒவ்வொரு நாளும் நடைபெறுகிறது. கடைசி மூன்று நாட்கள் மிக விமர்சையாகக் கொண்டாடப்படும். அதிலிலும் கடைசி நாளில் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்து சுமார் லட்சக்கணக்கில் திருநங்கைகள் திருவிழாவிற்கு வருகின்றனர். அரவான் வழிபாடு தமிழகத்தில் மட்டும் ஏறக்குறைய 44 இடங்களுக்கு மேல் நடைபெறுகிறது. சிறு தெய்வ வழிபாட்டின் நீட்சியாக அரவான் வழிபாடு உள்ளது.

திருநங்கைகள் தங்களுடைய தோழிகளைச் சந்தித்தல், அவர்களுடன் நடனமாடுதல் அரவானைத் தன்னுடைய கணவராக ஏற்று தாலி கட்டிக் கொண்டு மகிழ்ச்சியாக இருப்பர். அரவான் ஊர்வலமாக சென்ற பின்னர் தன்னுடைய கணவர் இறந்துவிட்டார் என்று தாலியறுத்து ஒப்பாரிப் பாடல்களைப் பாடி திருவிழாவை முடிக்கின்றனர்.

கூத்தாண்டவர் கோவிலுக்கும் குருசிலாப்பட்டு கோவிலுக்கும் இடையே உள்ள வேறுபாடு

விழுப்புரத்தில் உள்ள கூத்தாண்டவருக்கு அசைவம் கலப்பதில்லை. திருநங்கைகள் அனைவரும் விரதம் இருந்து அரவானுக்குத் தாலிக்கட்டி அறுப்பர். அங்கு நடைபெறும் எந்தச் சடங்குகளும் குருசிலாப்பட்டு கூத்தாண்டவர்க்கு நடப்பதில்லை. விழுப்புரத்தில் அமைந்துள்ள கூத்தாண்டவர்க்கு யாரும் பலி கொடுப்பதில்லை. அங்கு முதன்மையாகத் திருநங்கைகள் தான் விளங்குகின்றனர். இவர்களுக்காக ஒவ்வொரு வருடமும் திருவிழா கொண்டாடப்படுகிறது. ஆனால் குருசிலாப்பட்டில் அமைந்துள்ள கோவிலில் திருநங்கைகளின் வருகையானது அதிகமாக இல்லை. சுற்றியுள்ள பல ஊர்களில் இருந்து மட்டுமே திருநங்கைகள் வந்து கூத்தாண்டவரை வழிபட்டுச் செல்கின்றனர். இங்குள்ள மக்கள் யாரும் அவர்களை எதிர்த்துப் பேசுவது இல்லை. நல்ல மரியாதையாக நடத்துகின்றனர். ஆனால், குருசிலாப்பட்டு கோவிலுக்கு வரும் திருநங்கைகள் தாலிக் கட்டி அறுப்பதில்லை. அவரவர்களின் வசதிக்கு ஏற்ப பூஜைப் பொருட்களை மட்டும் கொண்டு வந்து கூத்தாண்டவரை வழிபட்டுச் செல்கின்றனர்.





(விழுப்புரம் கோவிலின் அமைப்பு) (குருசிலாப்பட்டு கூத்தாண்டவர் கோவிலில் முனைவர் பட்ட ஆய்வாளர் ப. காவியா)

குருசிலாப்பட்டு சுற்றியுள்ள திருநங்கைகள் எல்லாரும் வந்து நாங்களே திருவிழா செய்து வழிப்படுகிறோம் என்று ஊரில் உள்ள பொதுமக்களைக் கேட்டுள்ளனர். ஆனால் ஊர் மக்கள் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. இங்கு அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து மகிழ்ச்சியாகத் திருவிழா கொண்டாடுகிறோம். அனைவரும் மகிழ்வாக இருக்கும் போது நீங்கள் மட்டும் தாலிக் கட்டி அறுக்கும் சடங்கு எல்லாம் செய்தால் கவலையாக இருக்கும். உங்களுக்கு விழுப்புரம் கூவாகம் கோவில் இருக்கிறது. அங்கேயே உங்கள் சடங்குகளை செய்யுங்கள். இங்கு வந்து திருவிழா கண்டு மகிழ்ச்சியாக இருங்கள் என்று ஊர் மக்கள் கூறினர். அதனால் திருநங்கைகளும் ஒத்துழைப்புடன் எல்லா வருடமும் வந்து கூத்தாண்டவரை வணங்கிச் செல்கிறார்கள்.

முடிவுரை

பெரும்பான்மை சமூகமாகக் கொள்ளப்படும் ஆண், பெண் சமூகங்களை விடுத்து தன்னுடைய பாலியல் உணர்வால், சிந்தனையால், உடலில் உணர்வியல் விருப்பத்தால் பிறப்பு பாலினத்தில் இருந்து பிறப்பாலினமாகத் தங்களை மாற்றிக் கொள்பவர்கள் திருநங்கைகள். இவர்களுக்கும் உணர்வுகள் உண்டு அவற்றை மதிக்க வேண்டும். சமூகத்தில் வாழக்கூடிய மக்களுக்குச் சடங்குகள், விழாக்கள், வாழ்வியல் கூறுகள் என அனைத்தும் உள்ளது போல திருநங்கைகளுக்கும் அனைத்து உணர்வுகளும் வாழ்வியல் கூறுகளும் உள்ளன.

தமிழர் பண்பாட்டில் சடங்குகள் சமூக ஒற்றுமையையும், பண்பாட்டு அடையாளத்தையும் பாதுகாப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது. இதிலிருந்து குருசிலாப்பட்டு கூத்தாண்டவர் கோவில் வழிபாட்டு முறைகளை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

துணைநூற் பட்டியல்

References

திருநங்கைகள் வாழ்வியல் இறையியல், சூ.ம செயசீலன், வைகறை பதிப்பகம், 2010.

தகவலாளிகள்

பெயர்: சிகாமணி, வயது: 67, ஊர்: குருசிலாப்பட்டு

பெயர்: மூர்த்தி (கோவில் பூசாரி), வயது: 78, ஊர்: குருசிலாப்பட்டு

பெயர்: ராமமூர்த்தி, வயது: 43, ஊர்: திருப்பத்தூர்